தினமணி

# காரைக்கால் குறைந்துபோன குறுவை சாகுபடி

First Published : 12 Jun 2012 01:21:42 AM IST



காரைக்கால், ஜூன் 11: காரைக்காலில் கடந்த ஆண்டைக் காட்டிலும், நிகழாண்டு குறைந்த அளவு விவசாயிகளே குறுவை சாகுபடியை மேற்கொண்டுள்ளனர்.

காரைக்கால் மாவட்டத்தில் அம்பகரத்தூர், செல்லூர், சேத்தூர், நெடுங்காடு, நிரவி உள்ளிட்ட சில இடங்களே குறுகிய காலப் பயிரான குறுவை சாகுபடியை மேற்கொள்ளும் பகுதிகளாகயாகும்.

கடந்த ஆண்டு ஆயிரம் ஹெக்டேரில் ஆழ்குழாய் பாசனம் மூலம் குறுவை சாகுபடி செய்யப்பட்டதாக வேளாண்மைத் துறை தெரிவித்தது.

நிகழாண்டு இந்தப் பகுதிகளில் சில விவசாயிகளே குறுவை சாகுபடி செய்யத் தொடங்கியுள்ளனர். தற்போது, நடவு செய்யும் நிலையில் விவசாயிகள் உள்ளனர். விதைவிட்டு, 110 நாள்களுக்குள் அறுவடை செய்யும் வகையில், டி.கே.9, ஆடுதுறை 43, ஆடுதுறை 36 ஆகிய வகைகளை அவர்கள் விதைத்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் தரப்பில் கூறப்படுவது:

கடந்த ஆண்டு எலிகளால் பெரிய பாதிப்பை விவசாயிகள் சந்தித்தனர். எலி ஒழிப்பு நடவடிக்கையில் காரைக்கால் வேளாண்துறை தீவிர கவனம் செலுத்தவில்லை.

மேலும், பயிர் செய்யும் காலகட்டத்தில் வேளாண் நிறுவனங்கள் மூலம் தரமான விதை நெல், உரம் உள்ளிட்டவை வழங்கப்பட வேண்டும். ஆனால், அதற்காக போராடும் நிலைக்கு கடந்த ஆண்டு தள்ளப்பட்டோம்.

நெல் கொள்முதல் செய்ய நடவடிக்கை இல்லை. காரைக்காலைச் சேர்ந்தவர் வேளாண்மைத் துறை அமைச்சர், மாவட்ட ஆட்சியரையும் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடத்துங்கள், பல பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்குமென கோரியதும் நடக்கவில்லை.

தற்போது, சில வேளாண் அதிகாரிகளின் ஆலோசனையோடு குறுவை பயிரிட்டுள்ளோம். கடந்த ஆண்டு குறுவை பயிரிட்ட பல விவசாயிகள் பல்வேறு பிரச்னைகள் காரணமாக நிகழாண்டு நிலத்தை தரிசாகவே போட்டுவைத்துவிட்டனர் என்றனர்.

## இருபோக சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்குமா?

First Published : 12 Jun 2012 09:11:03 AM IST

மதுரை, ஜூன் 11: பெரியாறு, வைகை அணைகளின் நீர்மட்டம் குறைவாக இருப்பதால், நடப்பு ஆண்டில் இருபோக சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

மதுரை மாவட்டத்தில் 45 ஆயிரம் ஏக்கரில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பெரியாறு, வைகை திட்டம் மூலமாக இந்த விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

பெரியாறு, வைகை அணைகளில் மொத்தமாக 4 ஆயிரம் மில்லியன் கன அடிக்கு மேல் நீர் இருப்பு இருந்தால் மட்டுமே, இருபோக சாகுபடிக்கு ஜூன் முதல் வாரம் மற்றும் செப்டம்பர் அல்லது அக்டோபரில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம்.

ஆனால், ஜூன் 11-ம் தேதி நிலவரப்படி, பெரியாறு அணையில் 1070 மில்லியன் கன அடி, வைகை அணையில் 1,482 மில்லியன் கன அடி என மொத்தம் 2,552 மில்லியன் கன அடி மட்டுமே தண்ணீர் இருப்பு உள்ளது.

இதே நாளில், கடந்த ஆண்டில் (2011) 5,523 கன அடி தண்ணீர் இருப்பு இருந்தது. இதன் காரணமாக ஜூன் 14-ம் தேதி முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

தற்போது நீர்வரத்து போதிய அளவுக்கு இல்லாத காரணத்தால், அணையில் இருந்து பாசனத்துக்கு இதுவரை தண்ணீர் திறந்து விடப்படவில்லை.

முதல் போகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படும் பட்சத்தில் தேனி மாவட்டம் மற்றும் மதுரை, திண்டுக்கல் மாவட்டத்தின் சில பகுதிகள் உள்ளிட்ட 15 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இரண்டாம் போகத்துக்கு செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் தண்ணீர் திறந்து விடப்படும். பெரியாறு, வைகை அணைகளில் 6 ஆயிரம் மில்லியன் கன அடிக்கு மேல் நீர் இருக்கும்பட்சத்தில் இரண்டாம் போக பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும். தற்போதைய நிலையில், இரு அணைகளிலும் நீர்மட்டம் மிகக் குறைவாக இருப்பதால், விவசாயிகள் தென்மேற்கு பருவமழையை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றனர்.

பருவமழை கிடைக்காத பட்சத்தில் செய்ய வேண்டிய மாற்று ஏற்பாடுகள் குறித்து தெரிவிக்குமாறு, வேளாண் துறை அதிகாரிகளிடம் தமிழக அரசு கேட்டுள்ளது.

## விதை நிலக்கடலை வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்

First Published : 12 Jun 2012 09:02:39 AM IST

கம்பம், ஜூன் 11: கம்பம் பகுதி விவசாயிகளுக்கு விற்பனை செய்ய, அரசு வழங்கி உள்ள 4.5 டன் விதை நிலக்கடலையை விவசாயத்துறை அதிகாரிகள் விற்பனை செய்யாமல், இழுத்தடித்து வருவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்கில் கூடலூரில் ஆரம்பித்து தேவாரம் வரை உள்ள கிராமங்களில், மானாவாரி காடுகளில் நிலக்கடலை சாகுபடி செய்வது வழக்கம்.

சித்திரைப் பட்டத்தில் கோடை மழை உதவியுடன், இந்தச் சாகுபடி நடைபெறும்.

இந்நிலையில், இந்தாண்டு சித்திரைப் பட்டத்தில் விதைப்பதற்கென கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகளுக்காக 4.5 டன் விதை நிலக்கடலையை, கம்பம் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு அரசு அனுமதித்துள்ளது.

விதைக்கடலை வழங்கி, சில மாதங்களைக் கடந்தும், விவசாயிகளுக்கு விற்பனை செய்ய அதிகாரிகள் முன் வரவில்லை எனக் கூறப்படுகிறது.

இதுபற்றி விவசாயிகள் கேட்டால் ஏதேதோ காரணம் கூறி, அதிகாரிகள் விற்பனை செய்ய மறுப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இரண்டு வாரத்திற்கு முன்னரே, தேனி மாவட்ட விதைச் சான்று துறை கம்பம் விவசாய உதவி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள 4.5 டன் விதைக் கடலைக்கு சான்று வழங்கிவிட்டது.

ஆனால், 50 சதவீத மானியத்திற்கு அரசிடமிருந்து உத்தரவு வரவில்லையென்று அதிகாரிகள் தெரிவித்து, விவசாயிகளை திருப்பி அனுப்பி வருகின்றனராம்.

இதுதொடர்பாக விவசாயத் துறை அலுவலரிடம் விசாரித்தபோது, ஒரு கிலோ விதை நிலக்கடலை விலை ரூ.59. இதில் 50 சதவீத மானியம் ரூ. 28. மீதம், கிலோ ஒன்றுக்கு ரூ. 31 வீதம் விவசாயிகளுக்கு வழங்கலாம்.

கடந்த ஆண்டு உத்தரவை வைத்து, இந்த விற்பனையை மேற்கொள்ளலாம். ஆனால், இங்குள்ள அதிகாரிகள் விதை நிலக்கடலையை விற்பனை செய்யாமல் உள்ளனர் என்றார்.

இதுகுறித்து விவசாயிகள் தரப்பில் கூறியதாவது:

கம்பம் பகுதியில் நிலக்கடலை சாகுபடிக்கு அதிகாரிகள் போதிய ஒத்துழைப்பு தரவில்லை. சித்திரைப் பட்டத்தில் விதைப்பு செய்வதற்கு அரசு வழங்கி உள்ள 4.5 டன் விதை கடலையை, பலவித காரணங்களைக் கூறி விற்பனை செய்யாமல் இருக்கின்றனர் என்றனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## பால் பவுடர் ஏற்றுமதிக்கான தடை நீக்கம்

ஜூன் 12,2012,01:30



புதுடில்லி:கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் (எஸ்.எம்.பி.,) ஏற்றுமதிக்கான தடையை விலக்கி கொள்வதாக மத்திய அரசு நேற்று அறிவித்தது. இது, பால் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் விவசாயிகள் மற்றும் நிறுவனங்கள் தங்கள் நிதி நிலையை உயர்த்திக் கொள்ள ஏதுவாக அமையும்.இம்மாதம் தொடக்கம் முதல், நாட்டின் பால் உற்பத்தி உபரி நிலையை எட்டியது. இதையடுத்து, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் மீதான ஏற்றுமதியை நீக்க அரசு முடிவு செய்தது.இருப்பினும், பால் மற்றும் கிரீம், செறிவூட்டப்பட்ட பால், இனிப்பு கலந்த பால் பவுடர், குழந்தைகளுக்கான பால் உணவு ஆகியவற்றின் ஏற்றுமதி மீதான தடை நீடிப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

உள்நாட்டில், பால் விலை அதிகரித்ததையடுத்து, சென்ற 2011ம் ஆண்டு, பிப்ரவரி மாதம் முதல், கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் ஏற்றுமதிக்கு தடைவிதிக்கப்பட்டது.அண்மையில் பால் உற்பத்தி உயர்ந்ததையடுத்து, கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடரின் விலை உள்நாட்டில் சரிவடைந்தது. அதாவது, சென்ற ஆண்டில், 190-200 ரூபாயாக இருந்த, ஒரு கிலோ கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடரின் விலை தற்போது, 150 ரூபாயாக சரிவடைந்துள்ளது.

இதனால், இத்தொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் லாபம் குறைந்து, நிதி நெருக்கடியில் சிக்கித் தவித்தனர். இதையடுத்து, இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

உலகளவில் பால் உற்பத்தியில், இந்தியா முன்னணி நாடுகளுள் ஒன்றாக விளங்குகிறது. சென்ற 2011ம் ஆண்டில், நம் நாட்டின் பால் உற்பத்தி 12 கோடி டன்னுக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது

## நாட்டில் 84 ஆயிரம் ஹெக்டேரில் எண்ணெய் வித்துக்கள் விதைப்பு

ஜூன் 12,2012,01:21



புதுடில்லி:நடப்பு கரீப் பருவத்தில், நிலக்கடலை, எள் உள்ளிட்ட எண்ணெய் வித்துக்கள் அதிகளவில், பயிரிடப்பட்டுள்ளன என, வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.சர்வதேச அளவில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடுவதில், இந்தியாவின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. நடப்பு கரீப் பருவத்தில், இதுவரையிலுமாக, 84 ஆயிரம் ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பளவில், எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டுள்ளன. இதில், 24 ஆயிரத்து 200 ஹெக்டேரில், நிலக்கடலையும், 38 ஆயிரத்து 600 ஹெக்டேரில், எள் விதைகளும் பயிரிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டில், தமிழகம் மற்றும் கர்நாடகா மாநிலங்களில், நிலக்கடலை அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் 14 ஆயிரம் ஹெக்டேரிலும், தமிழகத்தில் 10 ஆயிரத்து 200 ஹெக்டேரிலும் நிலக்கடலை பயிரிடப்பட்டுள்ளது. கர்நாடகத்தில் 25 ஆயிரம் ஹெக்டேரில், எள் பயிரிடப்பட்டுள்ளது.நடப்பு பருவத்தில், 17 லட்சத்து 49 ஆயிரம் ஹெக்டேரில், பருப்பு வகைகள் பயிரிடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இதுவரையிலுமாக, 15 லட்சத்து 11 ஆயிரம் ஹெக்டேரில் தான், இவை பயிரிடப்பட்டுள்ளன.மேலும், 50 லட்சத்து 57 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. 7 லட்சத்து 98 ஆயிரம் ஹெக்டேரில், சணல் பயிரிடப்பட்டுள்ளது என, அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் ஜப்பானிய காடை வளர்ப்பு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2012,01:59 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் கல்லூரியில், 14ம் தேதி இறைச்சிக்கான ஜப்பானியக் காடை வளர்ப்பு குறித்து ஒரு நாள் இலவச பயிற்சி நடக்க உள்ளது' என, அதன்

ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:
நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 14ம் தேதி, "இறைச்சி உற்பத்திக்கான ஜப்பானியக் காடை வளர்ப்பு' என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி நடக்க உள்ளது.
பயிற்சியில், ஜப்பானியக் காடை இனம், கொட்டகை அமைத்தல், வளர்ப்பு முறை, இறைச்சி, முட்டை உற்பத்திக்கு தேவையான தீவன அளவு, முட்டைகள் சேகரித்து குஞ்சு பொறிக்கும் விதம், நோய்களும், அதை தடுக்கும் முறைகளும் குறித்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.
அதில், விவசாயிகள், பண்ணையாளர் என அனைத்து தரப்பினரும் பங்கேற்கலாம். அதில் பங்கேற்க விருப்பமுள்ள நபர்கள், நாளைக்குள், 04286-266345, 266244, 266650 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பருவமழை துவங்குவதையொட்டி பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி: வேளாண்துறை அறிவுரை

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2012,01:21 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பருவமழை துவங்க உள்ள நிலையில், விவசாயிகள் நிலத்தில் முதல் போக சாகுபடிக்காக, பசுந்தாள் உரப்பயிர்களை பயிர் செய்து வருகின்றனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பருவமழை துவங்கவுள்ளது. இதனால், அடுத்து வரும் சாகுபடி பயிர்களுக்கு ஏற்ற அங்கக சத்துக்களை மண்ணில் நிலைநிறுத்த கே.ஆர்.பி., அணை பாசன பகுதிகளில், விவசாயிகள் பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்துள்ளனர்.
இது குறித்து வேளாண் துறையினர் விவசாயிகளுக்கு வழங்கிய அறிவுரை வருமாறு:
நிலத்தில் ரசாயன பாதிப்பை தடுக்க பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைபூண்டு, சணப்பு போன்ற பயிர்களில் ஏதேனும் ஒன்றை விவசாயிகள் தேர்வு செய்து பயிரிடலாம். இதில், தக்கை பூண்டு விதையை ஒரு ஏக்கருக்கு, 20 கிலோ வீதம் பயன்படுத்தலாம். மேலும், விதையுடன் ரைசோபியம் உயிர் உரத்தை, இரண்டு பாக்கெட் வீதம் விதை நேர்த்தி செய்து வயலில் விதைக்க வேண்டும். இவற்றை, 45 முதல் 60 நாட்களுக்குள் அறுவடை செய்து வயலில் உழுதுவிடலாம்.
இதே போல், சணப்பு விதை ஒரு ஏக்கருக்கு, 15 முதல் 20 கிலோ விதைக்கலாம். விதையுடன் ரைசோபியம் உயிர் உரம், இரண்டு பொட்டலம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். விதைத்த, 45 முதல் 60 நாட்களில் அறுவடை செய்து வயலில் உழுது விடலாம்.
பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடி செய்வதன் மூலமாக, ஒரு ஏக்கருக்கு, எட்டு முதல் பத்து டன் பசுந்தாள் உரம் கிடைத்து, 50 முதல் 70 கிலோ வரை தழைச்சத்து மண்ணில் நிலை நிறுத்தப்படுகிறது. மேலும், பசுந்தாள் உரமிடுவதால் மண்ணில் இயற்பியல் மற்றும் வேதியியல்

மாற்றங்கள் சாதகமாக அமைகிறது. மண்ணில் காற்றோட்டத்தை அதிகரித்து அடிமட்டத்தில் உள்ள ஊட்டச்சத்துகளை உறிஞ்சி மேல்மட்டத்திலுள்ள வேர்களுக்கு கிடைக்கச் செய்கிறது. இதனால், மகசூல் 15 முதல் 20 சதவீதம் அதிகரிக்கிறது.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## பருவமழைக்கு காத்திருக்கும் மானாவாரி பருத்தி

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2012,01:47 IST

கோபிசெட்டிபாளையம்:கோபி, நம்பியூர் சுற்று வட்டாரத்தில் வட்டாரத்தில் மானாவாரியில் அதிகளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பருவ மழை துவங்காததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் பகுதியில், 6,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் மானாவாரியாக பருத்தி, நிலக்கடலை பயிராகிறது. நடப்பாண்டு கோபி வட்டாரத்தில் ஜனவரி முதல் ஜூன் மாதம் வரை சரியான மழை இல்லை. சரியான மழை இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

டி.என்.பாளையம் வட்டாரத்தில் வாணிப்புத்தூர், பங்களாப்புதூர், கொங்கர்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் குண்டேரிப்பள்ளம் அணை நீர் மூலம், 2,000 க்கும் மேற்பட்ட ஏக்கரில் நிலக்கடலை, பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. குண்டேரிப்பள்ளம் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், அணையின் நீர்மட்டம், 20 அடியாக குறைந்து விட்டது. அணை குட்டையாக மாறியுள்ளது. மானாவாரியில் பருத்தி மற்றும் நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள், மழையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இதுவரை பருவ மழை துவங்காததால் விவசாயிகள் பெரும் ஏமாற்றத்தில் உள்ளனர்.

மானாவாரியில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி மற்றும் நிலக்கடலை பயிர்களில் பூப்பிடிக்காமல், கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. கடுமையான வெயில் மற்றும் குண்டேரிப்பள்ளம் அணை வற்றியுள்ளதால், சுற்று வட்டாரத்தில் உள்ள கிணற்று நீர்மட்டம் குறைந்து வருகிறது. பருத்தி மற்றும் நிலக்கடலைக்கு தேவையான தண்ணீர் இல்லாததால், நடப்பாண்டு நிலக்கடலை மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் கூறியதாவது:

குண்டேரிப்பள்ளம் அணையில் ஏப்ரல் மாதம் முதல், 10 நாட்களுக்கு முறை என, 50 நாட்களுக்கு தண்ணீர் விடப்படுகிறது. இப்பாசனம் மூலம் நிலக்கடலை, எள், மக்காசோளம், பருத்தி போன்றவை பயிரிடப்படுகிறது. பாசனத்துக்கு தண்ணீர் நிறுத்தப்பட்ட பிறகு, அணையின் நீர்மட்டத்தை பொறுத்து கிணற்று நீர்ப்பாசனம் நன்றாக இருக்கும். கிணற்று நீர்ப்பாசனம் மூலம்

பருத்தி மற்றும் நிலக்கடலைக்கு தேவையான தண்ணீரை பாய்ச்சுவோம். நடப்பாண்டு அணையில், 20 அடி தண்ணீர் உள்ளதால், அணை குட்டையாகி விட்டது. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. பருத்தி மற்றும் நிலக்கடலைக்கு தேவையான தண்ணீர் இல்லாத சூழ்நிலையில் மகசூல் குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
நம்பியூர் வட்டாரத்திலும், கடுமையான வெயில் காரணமாக கிணற்று நீர்ப்பாசனம் பாதிக்கப்பட்டுள்ளது. பருவ மழை துவங்கினால் மட்டுமே பருத்தி, நிலக்கடலைக்கு தேவையான தண்ணீர் கிடைக்கும்.

## அரளிப்பூ விளைச்சல் ஜோர்: பறித்து விற்க மக்கள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : ஜூன் 12,2012,01:47 IST

ஈரோடு: ஈரோடு நெடுஞ்சாலைகளில் அரளிப்பூ விளைச்சல் ஜோராக உள்ளதால், அவற்றை பறித்து, விற்க மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
மாநிலம் முழுவதும் நான்கு வழிச்சாலைகளில் ஒலிமாசை தடுக்கும் வகையில், ரோட்டின் நடுவிலுள்ள சென்டர்மீடியனில் செடிகள் வளர்க்கப்படுகிறது. அரளிப்பூக்களை ஆடு, மாடுகள் உண்ணாது என்பதால், அனைத்து நெடுஞ்சாலைகளிலும் அரளிப்பூக்களையே நெடுஞ்சாலைச் துறையினர் வளர்க்கின்றனர்.
நெடுஞ்சாலைகளில் வளர்க்கப்படும் அரளிப்பூக்களை ஏலம் விட்டு, பூக்களை பறிக்க ஏலதாரர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதன் மூலம், நெடுஞ்சாலைக்கு கணிசமான வருவாய் கிடைத்து வந்தது. ஆனால், கடந்த சில மாதமாக நெடுஞ்சாலைகளில் வளரும் அரளிப்பூக்களை, பூக்கடைக் காரர்கள் அத்துமீறி பறித்து, கள்ளத்தனமாக விற்பனை செய்து வருகின்றனர். அரளிப்பூ கிலோ, 200 ரூபாய்க்கு மேல் விற்பனையாவதால், பூ விற்பனையாளர்கள் பெரும் லாபம் சம்பாதிக்கின்றனர்.
நெடுஞ்சாலைகளில் அரளி விளைச்சல் ஜோராக இருக்கும் போதே, அதிகாரிகள் ஏலம் விட நடவடிக்கை எடுத்தால், அரளி திருட்டை தவிர்க்கலாம். அரசுக்கும் கணிசமான வருவாய் கிடைக்கும்.

---

தினத்தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து நெல் வரத்து குறைந்ததால் தமிழ்நாட்டில் அரிசி விலை திடீர் உயர்வு ஒரு மூட்டைக்கு ரூ.150 முதல் ரூ.200 வரை அதிகரிப்பு

சென்னை, ஜூன்.12–

ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து நெல் வரத்து குறைந்ததால் தமிழ்நாட்டில் அரிசி விலை மூட்டைக்கு ரூ.150 முதல் ரூ.200 வரை உயர்ந்தது.

நெல்வரத்து குறைந்தது

தமிழ்நாட்டிற்கு, ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து தினமும் 500 லாரிகளில் நெல் வந்து கொண்டிருந்தது. தற்பொழுது 50 லாரிகளில் மட்டுமே நெல் வந்துகொண்டிருக்கிறது. கர்நாடக, ஆந்திராவில் இருந்து சன்ன ரக அரிசி குஜராத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து கண்டெய்னர்களில் ஆப்பிரிக்க நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மத்திய அரசு பாசுமதி (பிரியாணி) அரிசி மட்டுமே வெளிநாடுகளுக்கு செல்ல அனுமதியளித்திருக்கிறது. ஆனால் பாசுமதி அரிசி என்ற பெயரில் புழுங்கல் அரிசி ஆப்பிரிக்க நாடுகளுக்கு கடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

தமிழ்நாட்டில், தஞ்சாவூர், திருச்சி, ஆரணி, திண்டிவனம், காஞ்சீபுரம், செங்கல்பட்டு, செங்குன்றம், இளவம்மேடு, பொன்னேரி ஆகிய இடங்களில் தற்போது நெல் அறுவடை குறைந்துவிட்டது. மின்சார தட்டுப்பாடு, வேலைக்கு ஆட்கள் கிடைக்காமை, நெல் விளையும், இடங்கள் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு விற்கப்படுவதாலும் அரிசி விலை உயர்ந்துவருவதாக வியாபாரிகள் கருதுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் மழையின் அளவு குறைந்து வருவதால், நெல் பயிரிடப்படும் இடங்களில் கரும்பு பயிர் வகைகள், கிழங்கு வகைகளை விவசாயிகள் பயிரிடுவதாலும் அரிசி விலை உயர்ந்து வருவதாக கூறப்படுகிறது.

மூட்டைக்கு ரூ.200 உயர்வு

கடந்த மாதம் 76 கிலோ கொண்ட மோட்டா ரக நெல் மூட்டை ரூ.750–ல் இருந்து ரூ.1,050 ஆகவும், பி.பி.டி. நெல் 76 கிலோ கொண்ட மூட்டை ரூ.1,100–ல் இருந்து ரூ.1,500 ஆகவும் விலைகள் கடுமையாக உயர்ந்திருக்கிறது. நெல் தரகர்கள் ஆயிரக்கணக்கான மூட்டைகளை குடோன்களில் பதுக்கி வைப்பதாலும், வடமாநிலங்களில் அரிசி கடத்தப்படுவதாலும் விலைகள் தாறுமாறாக ஏறிவருகிறது.

25 கிலோ டீலக்ஸ் அரிசி மூட்டை கடந்த மாதம் ரூ.525–ல் இருந்து, இந்த மாதம் ரூ.625 ஆகவும், லோக்கல் பி.பி.டி. 25 கிலோ மூட்டை ரூ.700–ல் இருந்து ரூ.750 ஆகவும், பி.பி.டி.

ரகம் 25 கிலோ மூடடை ரூ.800–ல் இருந்தது ரூ.850 ஆகவும், கர்நாடகா சோனா அரிசி 25 கிலோ மூட்டை ரூ.850–ல் இருந்து ரூ.900 ஆகவும், வெள்ளை பொன்னி 25 கிலோ மூடடை ரூ.900–ல் இருந்து ரூ.950 ஆகவும், பி.எல். பச்சையரிசி 50 கிலோ மூட்டை ரூ.950–ல் இருந்து ரூ.1,050 ஆகவும், 75 கிலோ புழுங்கல் அரிசி மூட்டை ஏ.டி.டி.45 ரகம் ரூ.1,500–ல் இருந்து ரூ.1,600 ஆகவும், அதிசய பொன்னி 75 கிலோ மூட்டை ரூ.1,600–ல் இருந்து ரூ.1,700 ஆகவும். இட்லி அரிசி 75 கிலோ மூட்டை ரூ.1,350–ல் இருந்து ரூ.1,500 ஆகவும், பி.பி.டி. புதிய அரிசி 75 கிலோ மூட்டை ரூ.1,700–ல் இருந்து ரூ.1,800 ஆகவும், பழைய பி.பி.டி. ரூ.1,900–ல் இருந்து ரூ.2 ஆயிரமாகவும், வெள்ளை பொன்னி 75 கிலோ மூட்டை ரூ.2,550–ல் இருந்து ரூ.2,700 ஆகவும் விலை அதிகரித்துள்ளது. அதாவது, அரிசி ஒரு மூட்டைக்கு ரூ.150 முதல் ரூ.200 வரை உயர்ந்துள்ளது.

விளைச்சல் குறைவு

அரிசி விலை உயர்வால் நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இன்னும் இரண்டு மாதங்களில் நெல் அறுவடை ஆரம்பித்தபின்புதான் தமிழ்நாட்டில் அரிசி விலை குறைய வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. வட மாநிலங்களில் துவரம் பருப்பு விளைச்சல் குறைவாலும், தமிழக ரேஷன் கடைகளில் வினியோகம் செய்வதற்கு சிவில் சப்ளை கார்ப்ரேஷன் மூலம் துவரம் பருப்பு அதிக அளவில் கொள்முதல் செய்வதாலும் விலை அதிகரித்து வருவதாக வியாபாரி ஒருவர் கூறினார்.

கடந்த மாதம் 100 கிலோ கொண்ட துவரம் பருப்பு மூட்டை ரூ.6,300–ல் இருந்து ரூ.7 ஆயிரமாகவும், ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.68–ல் இருந்து ரூ.75 ஆகவும், இரண்டாம் ரக துவரம் பருப்பு ரூ.58–ல் இருந்து ரூ.65 ஆகவும், கடலை பருப்பு முதல் ரகம் ஒரு கிலோ ரூ.58–ல் இருந்து ரூ.62 ஆகவும், இரண்டா ரகம் ஒருகிலோ ரூ.53–ல் இருந்து ரூ.58 ஆகவும் விலை உயர்ந்துள்ளது என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க மாநில தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறினார்.